In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.22 |
| Name: Ramkannan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 22-07-2025.

**(A1 produced on V.C. A2 died. A3 to 9 absent.petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் கோவை வட்டம், உடுமலைப்பேட்டையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி மின் பொறியாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.7.2023 ம் தேதி திண்டுக்கல் நேருஜி நகர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி மின்பொறியாளராக பணிபுரிந்து வந்தபோது அன்றைய தினம் இரவு 7.15 மணிக்கு திண்டுக்கல் அண்ணா நகர், விமலா மருத்துவமனை சாலை பகுதியில் மின்தடை ஏதும் ஏற்பட்டதா என 23.07.2023 ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் மேற்படி விவரத்தை கேட்டு கடிதம் வைத்தார். அதன் அடிப்படையில் கம்பியாளர் மற்றும் முகவர் ஆகியோர்களை விசாரணை செய்து 20.7.2023 ம் தேதி இரவு 7.15 மணிக்கு திண்டுக்கல் அண்ணா நகர், விமலா மருத்துவமனை சாலைப்பகுதியில் மின்தடை ஏதும் ஏற்படவில்லை என விவரம் தெரிந்து ஆய்வாளர் அவர்களுக்கு அது சம்மந்தமாக நான் அறிக்கை செய்தேன். ஆய்வாளர் அது சம்மந்தமாக கொடுத்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.20. நான் வழங்கிய அறிக்கை அதசாஆ.21. இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 9 எதிரிகள்  தரப்பு குறுக்கு விசாரணை–

எனது அறிக்கையிலும், ஆய்வாளர் விசாரணையிலும் விமலா மருத்துவமனை பகுதியில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்ததாக குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.22 15:12:48 +0530

Principal District Judge,
Dindigul.